International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 04 Issue: 02 April to June 2022 www.irjtsjournal.org

தொல்காப்பிய இலக்கணத்தில் இழையோடியுள்ள மேற்கத்திய சிந்தனாவாக்கங்கள்

முனைவர் செ.ர. கார்த்திக் குமரன்

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை

தியாகராசர் கல்லூரி, மதுரை - 625 009

தமிழ்நாடு

ஆய்வுச்சுருக்கம்

தமிழிலக்கணப் பிரதியில் மிகப்பழமையான நூலாகக் கருதப்படும் தொல்காப்பியத்தில் மொழியப்பட்ட கருத்துக்கள், வரையறைகள் இரண்டாயிரம் வருடங்களைக் கடந்திருந்த போதிலும் இன்றும் அவை பொருந்தகூடியதாக இருக்கின்றன. தமிழினத்தின் மொழியை, சொல்லாடலை, மரபை, பண்பாட்டை, வாழ்வியலை வரையறுத்துக் கூறும் விதமாக இந்நூல் அமையப்பெற்றிருக்கிறது. எழுத்து, சொல், பொருள் என்ற அமைப்பில், ஒவ்வொன்றிலும் ஒன்பது இயல்களாகப் பாகுபடுத்தியுள்ளார் தொல்காப்பியர். இத்தகைய தொல்காப்பிய இலக்கணத்தில் முகிழ்ந்துள்ள மேற்கத்திய சிந்தனாவாக்கங்களைக் காணுவதாக மட்டுமே இக்கட்டுரை அமையப்பெறுகிறது.

முக்கியச் சொற்கள்

தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம், மேற்கத்திய சிந்தனாவாக்கங்கள், செவ்வியல், குறியியல், அமைப்பியம், பின்அமைப்பியம், மார்க்சியம்.

முன்னுரை

தமிழிலக்கணப் பிரதியில் மிகப்பழமையான நூலாகக் கருதப்படும் தொல்காப்பியத்தில் மொழியப்பட்ட கருத்துக்கள், வரையறைகள் இரண்டாயிரம் வருடங்களைக் கடந்திருந்த போதிலும் இன்றும் அவை பொருந்தகூடியதாக இருக்கின்றன. தமிழினத்தின் மொழியை, சொல்லாடலை, மரபை, பண்பாட்டை, வாழ்வியலை வரையறுத்துக் கூறும் விதமாக இந்நூல் அமையப்பெற்றிருக்கிறது. எழுத்து, சொல், பொருள் என்ற அமைப்பில், ஒவ்வொன்றிலும் ஒன்பது இயல்களாகப் பாகுபடுத்தியுள்ளார் தொல்காப்பியர். இவ்விலக்கண நூலில் உள்ள கருத்துக்கள் குறித்தும் அதன் அமைப்புமுறை குறித்தும் பெருமளவு ஆய்வுகள் நிகழ்த்தப்பெறவில்லை. எனினும் இவற்றிலுள்ள நூற்பாக்கள் (காலங்காலமாக)

அனைத்து தமிழ் இலக்கிய வகைமைகளுக்காகவும் உரையாசிரியர்களாலும் மேற்கோள்கள் காட்டப்பட்டுள்ளன.

எழுத்ததிகாரத்தின் இயல்களான நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல், புணரியல், தொகை மரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்பனவற்றில் நான்காவது இயலான 'புணரியல்' பற்றிய இலக்கண வரையறைகள் சொல்லப்பட்டிருக்க, ஒன்பதாவது இயலிலும் தனியே 'குற்றியலுகரப் புணரியல்' என வகுத்துச் சொல்லிருப்பதன் காரணமென்ன என்பதை ஆராய வேண்டும். இதேபோல, சொல்லதிகார இயல்களான கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் என்பதிலும் ஒன்பதாவது இயலாக 'எச்சவியல்' ஏன் தொகுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் கவனித்தல் வேண்டும்.

எழுத்ததிகாரம் - புணரியல் பகுதியில், "குற்றியலுகரமும் அற்றென மொழிப"[1] (நூற்.106) என்ற நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் "இது ஈற்றிற் குற்றியலுகரத்திற்கு ஓர் கருவி நுதலிற்று."[2] எனக் கூறுவதோடு, இவற்றிற்கான விளக்கத்தையும் பிற்பகுதியில் புலப்படுத்தியிருக்க, ஒன்பதாவது இயலாக குற்றியலுகரப் புணரியல் தொகுக்கப்பட்டிருக்கிறது. இத்துடன்,

"யகரம் வருவழி இகரங் குறுகும்

உகரக் கிளவி துவரத் தோன்றாது"[3] (நூற்.411) என குற்றியலிகரப் புணர்மொழி வரையறைகளும் இதில் சொல்லப்பட்டுள்ளது. மேலும், தொல்காப்பியம் குறிப்பிடும் சார்பெழுத்துக்களான,

"அவைதாம்

குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற

முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன."[4] (நூற்.2) என்பதிலும் குற்றியலிகரம் முதலாவதாக வைத்துச் சொல்லப்பட்டுள்ளது. குற்றியலுகரம் (சொல்) இல்லாமல் குற்றியலிகரத்தை புரிந்துகொள்ள முடியாது. எனினும் தொல்காப்பியர் 'இ'கரத்தை அகரவரிசைப்படி முதலாகவும் 'உ'கரத்தை அடுத்தாகவும் சொல்லியிருக்கலாம் என எண்ணுவதற்கு இடமுண்டு. இதேபோல்,

சொல்லதிகாரம் - எச்சவியல் பகுதியின் முதல் நூற்பாவிற்கு சேனாவரையர் உரையில், "கிளவியாக்க முதலாக உரியிய லிறுதியாகக் கிடந்த ஒத்துக்களுள் உணர்த்துதற் கிடமின்மையான் உணர்த்தப்படாது எஞ்சி நின்ற சொல் லிலக்கணமெல்லாந் தொகுத்துணர்த்திய வெடுத்துக்கொண்டார். அதனான் இவ்வோத்து எச்சவியலென்னும் பெயர்த்தாயிற்று."[5] என்று குறிப்பிடுகிறார். இதன்வழி பிற இயல்களில் சொல்லவியலாத வரையறைகளை தொல்காப்பியர் இதில் கூறியிருப்பதாகச் சொல்கிறார் சேனாவரையர். இதன் வாயிலாக ஒன்பது இயல்களாகத் தொகுக்கும் பொருட்டு தொல்காப்பியர் இவ்வியலை இயற்றியிருப்பதாக எண்ணத் தோன்றுகிறது. இதற்கு முன்னுள்ள இயலிலும் இதுபற்றிய எந்தவித குறிப்புகளும் இடம்பெறவில்லை. இவ்வாறாக, இவ்விரு அதிகாரங்களிலும் இறுதியாகவுள்ள இயல்களானது சில முக்கியக் மாற்றங்கள்/காரணத்தைக் கொண்டுதான் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது இடைச்செருகலாகவும் இருக்கலாம்.

தொல்காப்பியத்தில் உள்ள எழுத்து, சொல், பொருள் என்ற மூன்றும் பால்களாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை, “இஃது, எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்றுறுப்பு அடங்கிய பிண்டம். இம்மூன்றினையும் தொன்மை நல்லிசைச் சான்றோர் எழுத்துப்பால், சொற்பால், பொருட்பால் என வழங்கி வந்ததாகத் தெரிகின்றது. இவ்வுண்மை இறையனார் களவியலுரையுள் (56. திணையே கைகோள்) ‘தொல்காப்பியனார் பொருட்பால் உள்ளும் கண்டுகொள்க’ என நக்கீரனார் உரைக்கும் நல்லுரையால் விளங்கும்.”[6] என எழுத்ததிகார முன்னுரையில் சித்தாந்த பண்டிதர் கழகப் புலவர் ப. இராமாநாத பிள்ளை குறிப்பிடுகிறார். ஆக, ‘பால்’ என்பதற்குப் பதிலியாக ‘அதிகாரம்’ என மாற்றப்பட்டுள்ளதையும் ஆராய வேண்டும். அதிகாரம் என்ற சொல்லாடலின் அரசியல் நிலை குறித்தும் இதனூடாக உணரவைக்கிறது. இத்தகைய தொல்காப்பிய இலக்கணத்தில் முகிழ்ந்துள்ள மேற்கத்திய சிந்தனாவாக்கங்களைக் காணுவதாக மட்டுமே இக்கட்டுரை அமையப்பெறுகிறது. மேலும், இம்மூன்று அதிகாரத்திலும் உள்ள சில நூற்பாக்களை மட்டுமே எடுத்துக்கொள்ளப்பெற்று, அவைகள் கோட்பாடுகளினூடாக பொருத்துவதும் விளக்குவதும் தொடக்கநிலை முயற்சியே. தேவைப்படின் தொல்காப்பியம் குறித்த முழுமையான ஆய்வு வருங்காலங்களில் நிகழ்த்தப்பெறும்.

எழுத்ததிகாரம்

தொல்காப்பியத்தின் முதல் அதிகாரமான ‘எழுத்ததிகாரம்’ எழுத்தின் இலக்கணத்தை சீரிய முறையிலும் செம்மையான தன்மையிலும் மொழியப்பட்டுள்ளது. தமிழ்மொழியின் சீரிய, கூரிய, இனிய, மெல்லிய ஒலியமைப்புமுறை, புணர்நிலையால் ஏற்படும் ஒலிமாற்ற அமைப்பு போன்றவை விளக்கப்பட்டுள்ளன. இதனை இளம்பூரணர் தன் முன்னுரையில் “இவ்வதிகாரத்திலக்கணம் கருவியும் செய்கையும் என இரு வகைத்து. அவற்றுள், கருவி புறப்புறக்கருவியும், புறக்கருவியும், அகப்புறக்கருவியும், அகக்கருவியும் என நான்கு வகைப்படும்.”[7] என்கிறார். இதன்வழி எழுத்தின் இயங்கியல் முறை குறித்து விளக்கியுள்ளார். நூன்மரபு - எழுத்துக்களின் வகைகள், எண், அளவு, வடிவம், மயக்கம் என்ற ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் மாத்திரைக்கான அளபுகள் குறித்து,

“கண்ணிமை நொடிஎன அவ்வே மாத்திரை

நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே”[8] (நூற்.7) எனத் தொல்காப்பியர் கூறுகிறார். மனிதனின் இயல்பான செயல்பாடுகளை, மாத்திரையின் அளவோடு ஒப்பிடுவதற்கு இந்நூற்பா முயன்றிருக்கிறது. இது ஸ்டீபன் மல்லார்மேயின் ‘குறியீட்டியம்’ அல்லது ‘குறியீட்டமர்வியம்’ (Symbolism) என்ற இயத்திற்கு பொருத்தக்கூடியது. இதற்கு “சிம்பலிஸத்தின் மிக முக்கியமான சாதனை மொழியின் மீதான பிரக்ஞையைத் தட்டி எழுப்பியதுதான். … அதற்கென்று தனியான விதிகளும் வடிவங்களும் கொண்டது என்னும் புதிய சிந்தனையை சிம்பலிஸம்தான் முன்வைக்கிறது.”[9] என்று விளக்கமளிக்கப்பட்டிருக்கிறது. எழுத்தின் காலஅளவை (மாத்திரை) நிர்ணயிக்க தொல்காப்பியர் முயன்றபோது, உணர்வுரீதியான தாக்கத்தை ஏற்படுத்தி, புதுவித பாணியை கையாள்வதை இதனூடாக

அறிந்துகொள்ள முடிகிறது. இத்துடன், எழுத்தின்(தனக்கான) தனித்துவத்தையும் இந்நூற்பா வெளிப்படுத்தியுள்ளது. பிற நூற்பாக்களுக்கு இல்லாத தன்மை இதற்கு உண்டு எனலாம்.

“குறியீட்டமர்வு என்பது ‘வார்த்தைகளுக்கு மத்தியில் அறிவு ஆடும் நாட்டியம்’ என்கிறார்”[10] எஸ்ரா பவுண்ட். பிரெஞ்சக் கவிஞர் ஜீன் மோரியாஸ் “‘குறியீட்டமர்வுக்கான ஒரு பிரகடனம்’ என்ற தமது அறிக்கையில், ‘அசுத்தப்படுத்தப்படாத வார்தைகள், தாள லயம், முக்கியத்துவம் வாய்ந்த மிகைக்கூறல்கள், ஒத்துவராத வாக்கியங்கள், பன்மையான வடிவத்தன்மை’ போன்றவற்றை சிம்பலிஸ மொழியின் பண்புகளாகக் குறிப்பிடுகிறார்.”[11] இவ்வாறாக இவ்வியமானது கவிதையின் பாடுபொருளைக் கண்டடைவதாக இருப்பினும், தொல்காப்பிய இலக்கண வரையறைக்கும் மேற்கண்ட கூற்றுக்கள் பொருத்தமுடையதாக இருப்பதை உணரமுடிகிறது.

“உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்பற் றமைய நெறிப்பட நாடி
எல்லா வெழுத்துஞ் சொல்லுங் காலைப்
பிறப்பின் ஆக்கம் வேறுவே றியல
திறப்படத் தெரியுங் காட்சி யான”[12] (நூற்.83) என்னும் இந்நூற்பா எழுத்துக்களினது பொதுப்பிறப்பினைக் குறிப்பிடுகின்றது. உலக மொழிகளிலுள்ள எல்லா எழுத்துக்களின் பிறப்பிற்கும் பொருந்தக்கூடியதாக உள்ளதோடு, காலங்கடந்தும் நிற்கவல்லது. உண்மைத் தன்மையுடன் சரியான வடிவத்துடன் இருக்கின்றதனாலேயே இது ‘செவ்வியல்’(Classicism) தன்மை பெறுகிறது. மொழியினை அறிவியல் ரீதியாக ஆராய்வதற்கும் மொழியியல் துறைக்கும் இந்நூற்பா பெரிதும் துணைபுரிந்தது எனலாம். ஏனைய நுற்பாக்கள் தமிழ்மொழிக்குரியதாக இருக்க, இந்நூற்பா மட்டுமே பொதுத்தன்மை பெற்றிருப்பதை உணரமுடிகின்றது. இலக்கியங்களே செவ்வியல் தன்மை பெறும் என்ற நிலையில், தொல்காப்பிய இலக்கணமும் இச்சிந்தனாவாக்கங்களுடன் ஒத்திருப்பதை தகுந்த திறனாய்வின் வழி வெளிக்கொணர முடியும்.

சொல்லதிகாரம்

பொருள் தரக்கூடிய எழுத்துக்களின் ஒழுங்கமைவுகளையும் அதற்கான வரையறைகளையும் புணரும்போது அவற்றில் ஏற்படும் மாற்றங்களையும் சொல்லதிகாரம் எடுத்துரைக்கிறது. தமிழ்ச்சொல்லின் சிறப்பும் திணை, பால் முதலிய உயிர்ப்பகுப்பு மற்றும் உயிரில்பகுப்பு முறையும் தமிழர் நாகரிகச் சொல் திறனும் ஒவ்வொரு சொற்களுக்கான விதிவழிவகைகளும் இதில் விளக்கப்பட்டுள்ளன. மரபான முறைமைகளில் சொற்கள் குறித்து தொல்காப்பியர் சொல்லிருந்தாலும் இச்சொற்களானது காலத்திற்கேற்ற வகையில் மாற்றங்களையும் பெற்றுவருவது இயல்பே. கீழைச்சமூகங்கள் அல்லது தமிழ்ச்சமூகங்கள் குறித்த

சொல்லாடல்கள் இதில் இடம்பெற்றிருந்தாலும் இவற்றிலும் மேற்கத்திய கோட்பாட்டின் தாக்கங்கள் இயல்பாகப் பெற்றிருப்பதை நுட்பமான ஆய்வினூடாக காணஇயலும். அந்தவகையில்,

பெயரியல் உள்ள “எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே”[13](நூற்.155) என்ற முதல் நூற்பாலிருந்து தொடர்ந்த நான்கு நுற்பாக்களும் கிளவியாக்கத்துள் வைக்கவேண்டியன என சேனாவரையர் குறிப்பிடுகிறார். இடைச்சொல்லானது தனித்து பொருள் தராது. எனினும் அவை புணர்ச்சியினூடாக பொருண்மையைச் சுட்டவல்லன. ‘எந்தவொரு சொல்லும் அதற்கான உண்மையைப் பிரதிபலிப்பதில்லை’ என்ற ‘அமைப்பியல்’(Structuralism) வரையறைக்கு உட்படுத்தும்போது தொல்காப்பிய நூற்பா இதற்கு முரணான இருக்கின்றதை அறியமுடிகின்றது. மேலும், சொல்லுக்கும் பொருளுக்கும் எவ்வித ஒற்றுமையும் இல்லாது இருப்பதையும் நாம் அறிவினூடாக உணரலாம். இதைத்தான் இடுகுறிப்பெயர், காரணப்பெயர் என்பதாக இலக்கணம் பகர்கின்றது. இருப்பினும், இந்நூற்பா தமிழ்ச்சொற்களுக்கான தனித்தன்மையை மட்டுமே உணர்த்துவதற்காகச் சொல்லப்பட்டதாக இருக்கலாம். காலமாற்றத்திற்கேற்ப சொற்களும் மாறுபட்டுக்கொண்டே, மாறுபட்ட பொருள்தரக்கூடியதாய் வரக்கூடும் எனத் தொல்காப்பியர் எண்ணியிருக்கலாம்.

“செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்”[14](நூற்.13)

“வினாவும் செப்பே வினாஎதிர் வரினே”[15](நூற்.14)

“செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே
அப்பொருள் புணர்ந்த கிளவி யான”[16](நூற்.15)

“செப்பினும் வினாவினும் சினைமுதற் கிளவிக்கு
அப்பொருள் ஆகும் உறழ்துணைப் பொருளே”[17](நூற்.16) என்னும் நூற்பாக்கள் வினாவும் விடையும் அமையும் வகைகளைக் குறிப்பிடுகின்றது. வினாவுக்கேற்ற நேர் விடை, மாற்று விடை, எதிர்வினா விடை, குறிப்பு விடை, ஒப்புமை விடை என்கிற வகையில் ஒரு வினாவுக்கு பல்வேறு விடைகள் இருப்பதை தொல்காப்பியர் இந்நூற்பாக்களின் வாயிலாகச் சுட்டிக்காட்டியுள்ளார். இத்தகைய அமைப்புமுறைமையானது ‘பின்அமைப்பியல்’ (Post Structuralism) என்ற கோட்பாட்டின்படி, “மொழி என்பது வெறும் மறிவினையால் (reflex) அனிச்சையாகச் செய்யப்படும் செயல் அல்ல. அது உணர்வு விழிப்புற்ற நிலையில் செய்யப்படுவது. ... மொழி என்பது தனித்த நிகழ்வல்ல. இருவர் சம்பந்தப்பட்டது. பேசுபவன் x கேட்பவன்; எழுதுபவன் x வாசிப்பவன். எனவே பேசுபவன் பேசும் ஒரு வார்த்தையைக் கேட்பவன் வேறுமாதிரி புரிந்துகொள்ளக்கூடும். அதேபோல் எழுதுபவன் எழுதும் ஒரு வார்த்தையைப் படிப்பவன் வேறுமாதிரி புரிந்துகொள்ளக்கூடும். எனவே, அமைப்பியல் சொல்லும் குறிகளின் அர்த்தம் என்பது ‘பொருள்படுத்திக்கொள்வதில்’(interpretation) தான் இருக்கிறது.

அந்தப் பொருள்படுத்திக்கொள்ளும் அர்த்தம்கூட நிலையானதல்ல; மாறிக்கொண்டே (shifting) இருக்கும் நிலையற்ற (unstable) அர்த்தங்கள்."[18] என்ற பின்அமைப்பியல்வாதியான ரோலான் பார்த்தின் கூற்றுக்கு மேற்கண்ட இந்நூற்பாவிற்கு பொருத்தப்பாடாக இருப்பதை உணரமுடிகிறது. மனிதனின் சிந்தனையோடு தொடர்புடைய மொழியானது, அவனுடையப் புரிதலுக்கேற்ற வகையில் செயல்பாடுகள் இருப்பதோடு, அவனின் பண்பாம்சங்களையும் வெளிக்கொணர்கிறது. "ஒரு மொழியமைவு என்பது, கருத்துகளின் வேறுபாடுகளின் தொடரமைப்புடன் ஒலிவேறுபாடுகளின் தொடரமைப்பு இணைவதுதான் என்று எழுதும் சசூர், இறுதியாக, 'மொழியில், நேரடியாக வார்த்தைகள்/கருத்துகள் இல்லை: வித்தியாசங்கள் மட்டுமே உள்ளன' என்று முடிக்கிறார். எனினும் குறிப்பானுக்கும் குறிப்பீட்டிற்குமிடையில் ஓரளவு நிச்சயத்தன்மை உண்டு என்பதே அவர் கருத்து. இதில் குறித்தலின் நிச்சயமற்றதன்மை(Indeterminacy of signification) என்ற கருத்தை உள்வாங்கிப் பின்அமைப்பியம் தோன்றுகிறது எனலாம்."[19] என்ற க.பூரணச்சந்திரனின் கருத்தினூடாக, வினாக்களுக்கு ஏற்ற விடைகளானது, வித்தியாசப்படுதல் மற்றும் நிச்சயமற்றதன்மை என்கிற முறையில் அமைந்திருந்தாலும் அவைகளை விடைகளாகவே ஏற்றுக்கொள்ளலாம் எனத் தொல்காப்பியர் கூறியிருப்பதனூடாக, சமகால மேற்கத்திய சிந்தனையை தன்னுள் உள்வாங்கிக்கொண்டுள்ளதை உணர்ந்துகொள்ள முடிகிறது.

"அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்"[20](நூற்.442)

"மறைக்குங் காலை மரீஇயது ஒராஅல்"[21](நூற்.443) என்ற இவ்விரு நூற்பாக்களும் இடக்கர்ச்சொல்லுக்கான மரபு வகையை சுட்டிக்காட்டுகிறார் தொல்காப்பியர். பொதுஅவையில் உரைக்கப்படாத சொல்லை மறைத்து, பிறவற்றால் உணர்த்துவதை சொல்கிறார். இதைத்தான் 'மறைபொருள் அகத்திறப்பாங்கு'(Abstract expressionism) எனப்படும் கோட்பாடு எடுத்தியம்புகிறது. "'மரபைப் புறக்கணித்தும் அதே சமயம் அதை நிராகரிக்காமலும் இருத்தல்; இந்த உலகம் தன்னோடு சேர்ந்து வாழ நம்மை அனுமதிக்கிறது. எனவே, நாம் சில உண்மைகளையாவது பராமரிக்க வேண்டும்' என்பது போன்ற கொள்கைகள் இந்தக் கோட்பாட்டின் மையக்கருத்து எனலாம்."[22] இவ்வாறு, நாம் மரபுகளோடு இணைந்திருக்கும் மொழியின் உறவுகளை இது எடுத்துரைக்கிறது. மரபுகளின் எச்சங்கள் இன்றும் பல்வேறு வகைகளில் தொடர்ந்து வருவதை தொல்காப்பியமும் மேலைநாடுகளில் தோன்றிய இயங்களும் ஒன்றுக்கொன்று ஒத்திருப்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

பொருளதிகாரம்

தமிழின மக்களின் வாழ்வியலை, பண்பாட்டை, அறங்களை, உணர்வுகளை, பாவினங்களை, சுவைகளை, மரபுகளை என யாவற்றையும் தக்க வரையறைகளுடன் தொல்காப்பியர் பொருளதிகாரத்தின் வழி மொழிந்துள்ளார். பிற மொழியிலக்கண நூல்களில் பொருளிலக்கணம் குறித்த வரையறைகள் சொல்லப்படாத நிலையில், இதில் கூறப்பட்டுள்ள பல கருத்தியல்கள், அனைத்திற்கும்/அனைவருக்கும் பொருந்தக்கூடியதாக உள்ளன. இதன் இயல்களான அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் என்பதன் வாயிலாக

பல்வித ஒழுக்கநெறிகளை இதில் தெளிவாக விளக்கிக்காட்டியுள்ளார். பல காலங்களைக் கடந்தாலும் இவற்றிலுள்ள நுட்பங்கள், அறிவியல்சார் உண்மைகள் என்றென்றைக்கும் மாறுபடாது.

“ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.”[23](நூற்.571) என்ற மரபியல் நூற்பா இதற்குச் சான்றாகும். ஓர் அறிவு முதல் ஆறறிவு வரையுள்ள உயிர்களை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எடுத்தியம்பியிருப்பது ஆழறிவின் வெளிப்பாடே. இத்தகைய பொருளதிகாரத்திலும் இயல்பாகவே பல இயங்கள் முகிழ்ந்துள்ளன. இதனை இணைத்து அல்லது ஒப்பீட்டுப் பார்க்கும்போதுதான் தொல்காப்பியத்தின் தனித்துவச் சிறப்பினை உணரமுடிவதோடு, ஆழ்ந்த புரிதலுக்கும் வழிவகைச் செய்கின்றது.

முதலாவதாக உள்ள அகத்திணையியலில், நான்கு வகை வர்ணபாகுபாடுகளுடைய மக்களை குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன. இன்ன பிற மக்கள் குறித்த செய்திகள் பெருமளவு இடம்பெறவில்லை. நாநிலங்களில் உள்ள மக்களைப் பற்றிச் சொல்லும்போது இந்நான்கு வர்ணபாகுபாடுகள் சொல்லப்பட்டுள்ளது. அன்பின் ஐந்திணையில் இல்லாத மக்களைப் பற்றிச் சொல்லும்போது, அவர்களை வர்ணபாகுபாடுகளிலிருந்து விலகியவர்களாக, கீழானவர்களாக தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

“அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்
கடிவரை இலபுறத் தென்மனார் புலவர்.”[24](நூற்.25)

“ஏவல் மரபின் ஏனோரும் உரியர்
ஆகிய நிலைமை அவரும் அன்னர்.”[25] (நூற்.26) என்கிற நூற்பாக்களினூடாக, அறம், பொருள், இன்பங்களிலிருந்து வழுவிய வாழ்வை மேற்கொண்டவர்களான அடியோரும், வினைவலரும் ஏவல் தொழிலைச் செய்கின்ற இழிவானர்களாக தொல்காப்பியம் கூறுகிறது. இயற்கையோடு இயைந்த வாழ்வியலை வாழ்ந்த மக்களிடையே, இத்தகைய பாகுபாடுகள் பிரிவினை ஏற்படுத்தும் தன்மையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இது மார்க்சியக் கோட்பாட்டு சொல்லும் வர்க்கமுரண்களைத் தோற்றுவிக்கிறது. “அதாவது, சமூக, பொருளாதார அமைப்பினை ஆட்சிசெய்யும் சுரண்டலும், அதிகாரமும், சமூகப்பண்பாட்டு வாழ்க்கையை நிர்ணயிக்கின்றன.

அறநெறி, சமூகம், தத்துவம் ஆகியவை மனித மூளையின் செயல்பாடுகள் அனைத்தையும் நிர்ணயிக்கும். ஒரு சமுதாயத்தின் பொருளாதாரம்தான் பிற அனைத்தையும் இறுதியில் நிர்ணயிக்க கூடியது.”[26] என்ற வரையறைக்கேற்ப, பொருளாதாரம் மற்றும் அதிகாரம்தான் வர்க்கப்பிரிவினையை

உண்டாக்குகிறது என்பதை இதன்வழி அறியமுடிகிறது. மக்களைப் பிளவுபடுத்துகிற தன்மையில் தொல்காப்பியத்தின் இந்நூற்பா அமைந்திருக்கிறது. சமூகப்பிரிவினைகளின் முரண்பாடுகள் பண்பாட்டு முரண்பாடுகள் எழுவதற்கான அடித்தளத்தை உண்டாக்குகின்றன.

"மெய்தொட்டுப் பயிறல் பொய்பா ராட்டல்
இடம்பெற்றுத் தழாஅல் இடையூறு கிளத்தல்
நீடுநினைந்திரங்கல் கூடுத லுறுதல்
சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழித்
தீராத் தேற்றம் உளப்படத் தெகைஇப்
பேராச் சிறப்பின் இருநான்கு கிளவியும்
பெற்றவழி மகிழ்ச்சியும் பிரிந்தவழிக் கலங்கலும்
நிற்பவை நினைஈ நிகழ்பவை உரைப்பினும்
குற்றங் காட்டிய வாயில் பெட்பினும்
பெட்ட வாயில்பெற் றிரவுவலி யுறுப்பினும்
ஊரும் பேருங் கெடுதியும் பிறவும்
நீரிற் குறிப்பின் நிரம்பக் கூறித்
தோழியைக் குறையுறும் பகுதியும் தோழி
குறையவட் சார்த்தி மெய்யுறக் கூறலும்
தண்டா திரப்பினும் மற்றைய வழியும்
சொல்லவட் சார்த்தலிற் புல்லிய வகையினும்
அறிந்தோள் அயர்ப்பி னவ்வழி மருங்கில்
கேடும் பீடுங் கூறலும் தோழி
நீக்கலி னாகிய நிலைமையும் நோக்கி
மடல்மா கூறும் இடனுமா ருண்டே."[27](நூற்.99) என்ற களவியல் நூற்பாவானது, இயல்பாகவே ரொமாண்டிசிஸம் (Romanticism) கோட்பாட்டை தன்னுள் கொண்டுள்ளது. இயற்கைப்புணர்ச்சிக்குப் பின் தலைவன், தலைவிக்கிடையே நிகழும் காதல் வாழ்க்கையைக் இந்நூற்பா குறிப்பிடுகிறது. "'உணர்தல்', 'கற்பனை', 'அனுபவம்', 'ஏக்கம்' போன்றவை ரொமாண்டிசிச யுகத்தின் முதன்மைச் சொற்களாகும். தனிமனிதன் என்பவன் பகுத்தறிவுக்கு உட்படாதவன்; கற்பனாவாதி தனிப்பட்டவன்; தன்னிச்சையாக இயங்குபவன்; உணர்ச்சிப்பிழம்பால் ஆனவன்; மனக்கோட்டைகளைக் கட்டுபவன்; இயல்பை மீறிச் செல்பவன் என்றெல்லாம் ரொமாண்டிசிசவாதிகள் மனிதனைப் பற்றிப் பிரகடனம் செய்தார்கள்."[28] என்ற வரையறைக்கு ஏற்றதாக அமையப்பெற்றிருக்கிறது. தலைவியைத் தன்வயப்படுத்த நினைக்கும் தலைவன், தான் செய்கின்ற தன்னிச்சையான செயல்களை, உணர்வுகளை எடுத்துக்கூறும் விதமாக உள்ளது. இதேபோல,

"மறைத்தவற் காண்டல் நற்காட் டுறுதல்

நிறைந்த காதலில் சொல்லெதிர் மழுங்கல்"[29](நூற்.109) எனத் தொடங்கும் களவியல் 109வது நூற்பாவிலும் தலைவிக்குரிய கூற்று நிகழுமிடங்களையும் அவளின் உணர்வுகளையும் தெளிவுபட இயம்பியுள்ளார் தொல்காப்பியர். தமிழினத்தில் உள்ள அன்பின் வெளிப்பாட்டினை, பரிணாமத்தை நயம்பட எடுத்துரைத்ததோடு, அவற்றிற்கான படிநிலைகளையும் தொல்காப்பியப் பிரதி கட்டமைத்துள்ளது. மேலும், புறத்திணைப் பற்றி குறிப்பிடும்போதும் அகத்திணைக்கு இணையானதாகவே சொல்லப்பட்டிருக்கிறது. இதனை, "வெட்சி தானே குறிஞ்சியது புறனே"[30] என்ற நூற்பாவின் வாயிலாக அறியலாம். அகத்தில் மனித மனங்களை பிறருக்குத் தெரியாமல் களவு கொள்வதுபோல, புறத்தில் ஆநிரைகளைப் பிறருக்குத் தெரியாமல் களவு கொள்ளுதலை குறிக்கிறது. இதனால்தான் தொல்காப்பியர் அகத்திணைக் கோட்பாடுகள் பற்றி தெளிவாக உணர்ந்தவர்களுக்கு புறத்திணைக் கோட்பாட்டினை திறன்பட உணர்ந்துகொள்ள முடியும் என்று தன் நூற்பா(59) வழி கூறியுள்ளார்.

சமகாலத் தமிழ்ப் புனைகதைப் படைப்பிலக்கியத்தின்(உரைநடை) தன்மை மற்றும் வடிவம் குறித்தும் செய்யுளியியலில் வரையறுக்கப்பட்டுள்ளது.

"பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுத்த கிளவி யானும்
பொருள்மர பில்லாப் பொய்ம்மொழி யானும்
பொருளோடு புணர்ந்த நகைமொழி யானும்என்று
உரைவகை நடையே நான்கென மொழிப"[31](நூற்.475) என்ற வகையில், நாவல் மற்றும் சிறுகதையின் உருவ, உள்ளடக்கமானது, புனைவினூடாக எழுத்துருவாக்கம் பெறும் படைப்பு என்பதாக தொல்காப்பியர் கூறுகிறார். எந்தவித பொருண்மையைக் கொண்டிராத, நகைப்பைத் தரக்கூடிய உரைநடையில் அமைந்த பொய்யான மொழி(சொல்) என்று குறிப்பிடுகிறார். இலக்கிய வகைமைகள் அனைத்திற்கும் பொருந்தும்படியான விதிகளை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தொல்காப்பியம் என்ற நூல் எவ்வாறு சொல்லிருக்கக்கூடும் என்பது நம்முடைய சிந்தனையைத் தூண்டும் விதமாகவே உள்ளது. இதற்கடுத்தாக வரும் நூற்பாவும் (எடுத்துரைப்பிலில்) இருவகைத் தன்மைகளான மைந்தர்க்கு உரைப்பன, மகளிர்க்கு உரைப்பன என்றும் வகைப்படுத்தியுள்ளார். மேற்கத்திய சிந்தனாவாக்கங்கள் மற்றும் கோட்பாடுகளுக்கு முன்னரே தொல்காப்பியத்தில் உள்ள விதிகளானது, தனக்கென்று தனித்த கருத்தியல்களைக் கொண்டிருப்பதை ஆழ்ந்த வாசிப்பின் ஊடாக உணர்ந்துகொள்ள முடியும்.

"எழுத்தொடுஞ் சொல்லொடும் புணரா தாகிப்
பொருட்புறத் ததுவே குறிப்பு மொழியே"[32](நூற்.481) என்னும் நூற்பா எழுத்து, சொல் அல்லாத குறிகளும் ஒரு பொருண்மையை உணர்த்த முடியும் என்பதை சுட்டிக்காட்டுகிறது. இதனைத்தான் 'குறியியல்' (Semiotics, Symbolism) கோட்பாடு உணர்த்துகிறது. "குறியியல் கோட்பாட்டாளர்களால் 'குறியீட்டுக் குறி' என்று குறிப்பிடப்படும் கருத்தாக்கமே, பிற துறையினரால் - குறிப்பாக இலக்கியத் திறனாய்வாளர்களால் - 'குறியீடு' என்றழைக்கப்படுகிறது. ... குறியீடு என்னும் தமிழ்ச்சொல் 'ஈடு செய்யும் குறி' அல்லது 'ஈடாக நிற்கும் குறி' என விரிவடையும். இதன்வழி 'ஒரு கருத்தினை அல்லது ஒரு

பொருண்மையினை ஈடு செய்வதற்காக, வேறொன்றின் இடத்தில் தானே பதிலியாக நிற்பது' என்ற சொன்மை விளக்கம் பெறப்படும். மேலும், 'ஒரு கருத்து அல்லது பொருண்மைக்குப் பதிலாக, அதனிடத்தில் தான் நின்று சார்ப்பாண்மைப்படுத்துதல்' மூலம் இச்சொல்லுக்குரிய பொருண்மைப் பொருத்தமும் தெளிவாகும்."[33] என்ற இவ்வரையறையின்படி, தனக்கெனவுள்ள குழுவிற்கு, இனத்திற்கு குறிகளின்(Signs) வாயிலாக ஒரு கருத்தினை, பொருண்மையைச் சொல்ல முடியும் என்பதை இது புலப்படுத்துகிறது. எதனையும் வெளிப்படையாகக் கூறாமலிருக்கும்பட்சத்தில் குறிப்பினால் கேட்பவர்க்கு இன்பம் பயக்கும் வண்ணம் பொருளை உணர்த்துவதாகும். இத்தகைய குறியானது, சமகாலத்தில் இலக்கியத்துறை மட்டுமல்லாமது, அனைத்து தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களும் பயன்படுத்துகின்றதை நம்மால் பார்க்கமுடிகிறது.

"நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய"[34](நூற்.615)
"படையுங் கொடியுங் குடையும் முரசும்
நடைநவில் புரவியுங் களிறுந் தேரும்
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோல் அரசர்க் குரிய"[35](நூற்.616)
"வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை"[36](நூற்.622)
"வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி"[37](நூற்.625)

"அன்ன ராயினும் இழிந்தோர்க் கில்லை"[38](நூற்.629) என்ற நூற்பாக்கள் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, வர்க்க முரண்பாடுகளைச் சொல்கின்ற தன்மையில் அமையப்பெற்றுள்ளது. ஆகையினால் இது நேரடியாகவே மார்க்சியம் கோட்பாட்டை உள்வாங்கியுள்ளது எனலாம். "மார்க்சின் வாதப்படி, கருத்துகள், மக்களது பண்பாட்டு வாழ்க்கை, அவர்களது சமூக அமைப்பு, மதங்கள் தெய்வீக அறிவின் படைப்புகள் என்று மக்கள் நம்பவைக்கப்பட்டிருக்கிறார்கள். இதை மார்க்ஸ் மாற்றி, மெய்நிலை சமுதாய, பொருளாதார வாழ்க்கையின் விளைவுகளே, எல்லா அறிவுசார் கொள்கைகளும் அமைப்புகளும் என்றார். சமூக-பொருளாதார அடிப்படையில் மேற்கட்டமைப்புகளான கொள்கை, அரசியல் ஆகியன நிற்கின்றன."[39] என்கிற வரையறைப்படி, அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வர்ணப் பாகுபாடுகளின் நிலையைக் குறித்தும் அவர்கள் மேற்கொள்ளும் செயல்கள் குறித்தும் மரபியில் பகுதியில் கூறியுள்ளார். இழிந்தோர்க்கான வாழ்வியல் நிலை மற்றும் இன்ன பிறவற்றிற்கானத் தகவல்கள் இல்லை. இதரப் பணிகளைச் செய்யும் மாந்தர்கள் பற்றியும் எந்தவித குறிப்புகளுமில்லை. அதிகார மேற்கட்டமைப்பு தன்னை நிலைநிறுத்திக் கொள்வதில்தான் கவனம் செலுத்துகிறது என்பதை இதன்வழி அறிய வாய்ப்புள்ளது. இத்துடன், சமூகப் பொருளாதார அடிப்படையில் உயர்ந்தவர்கள் செய்யும் அரசியலையும் உணரமுடிகிறது. மேலும், தன்னை மையமாக்கிக்கொண்டு, இழிந்தவர்களை அவர்களுக்குக்

கீழானவர்களாக விளிம்புநிலைக்குட்படுத்தும் சூழலானது, தொல்காப்பிய காலகட்டத்தில் இருந்திருக்குக்கூடும் என எண்ணத் தோன்றுகிறது.

முடிவுரை

தொல்காப்பியம் என்ற நூலை எழுதிய ஆசிரியரின் பெயரைக் கண்டடைய முடியாமல் போனாலும் மூன்று அதிகாரத்தின் வாயிலாகச் சொல்லப்பட்ட கருத்தாக்கங்கள் தற்காலகட்டத்திலும் பொருந்துவதாகவே உள்ளது. எனினும், இப்பிரதியினை ஆய்வுக்குட்படுத்தும் போது சிலவிடங்களில் மாற்றுக் கருத்துக்கள் தோன்றுவதற்கான சாத்தியக்கூறுகளும் இருக்கின்றன. இலக்கிய, இலக்கணங்கள் தொடர்ந்து மாறுபட்டுக்கொண்டே வரும் சூழலில், தொல்காப்பியமானது தன்னளவில் முழுமைப்பெற்றிருக்கிறது. இதனால்தான் இப்பிரதியானது, மேற்கத்திய சிந்தனாவாக்கங்களை தன்னுள் இயல்பாகவும் ஊடிழையாகவும் கொண்டுள்ளது. இந்நூலினை குறித்த ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளும்போது, பலதரப்பட்ட கருத்தியல்களைப் பெறமுடிவதோடு, சமகால வாசிப்பிலும் தொல்காப்பியம் தன்னை நிலைநிறுத்திக்கொள்ள முடியும்.

மேற்கோள் விளக்கக் குறிப்புகள்

[1] இளம்பூரணர்(உரை), தொல்காப்பியம், ‘எழுத்ததிகாரம்’, ப.65. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 18. 12 ஆவது பதிப்பு, ஏப்ரல் 2000.

[2] மேலது., ப.66.

[3] மேலது., ப.223.

[4] மேலது., ப.14.

[5] சேனாவரையர்(உரை), தொல்காப்பியம், ‘சொல்லதிகாரம்’, ப.219. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 18, 16ஆம் பதிப்பு, மே 2001.

[6] இளம்பூரணர்(உரை), முந்நூல், ப.vi.

[7] மேலது., ப.1.

[8] மேலது., ப.16.

[9] எம்.ஜி. சுரேஷ், இஸங்கள் ஆயிரம், பக்.92-93. அடையாளம் பதிப்பகம், திருச்சி - 10, முதல் பதிப்பு, 2017.

[10] மேலது., ப.93.

[11] மேலது., ப.94.

[12] இளம்பூரணர்(உரை), முந்நூல்., ப.54.

[13] சேனாவரையர்(உரை), முந்நூல்., ப.113.

[14] மேலது., ப.14.

[15] மேலது., ப.16.

[16] மேலது., ப.16.

[17] மேலது., ப.16.

[18] எம்.ஜி. சுரேஷ், முந்நூல்., பக்.189-190.

[19] க. பூரணச்சந்திரன், அமைப்பியமும் பின்அமைப்பியமும், ‘பின்அமைப்பியம்’, பக்.38-39. அடையாளம் பதிப்பகம், திருச்சி - 10, இரண்டாம் பதிப்பு, 2009.

[20] சேனாவரையர்(உரை), முந்நூல்., ப.254.

[21] மேலது., ப.255.

[22] எம்.ஜி. சுரேஷ், முந்நூல்., ப.137.

[23] இளம்பூரணர்(உரை), தொல்காப்பியம், 'பொருளதிகாரம் (பகுதி 3)', ப.197, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 18, 2001.

[24] மேலது., ப.27.

[25] மேலது., ப.29.

[26] ச. வின்சென்ட், திறனாய்வுக் கோட்பாட்டாளர்களும் கோட்பாடுகளும், 'மார்க்சும் பின்மார்க்சியமும்', ப.219, பிறழ் வெளியீடு, மதுரை - 19, முதல் பதிப்பு, டிசம்பர் 2019.

[27] இளம்பூரணர்(உரை), தொல்காப்பியம், 'பொருளதிகாரம்(பகுதி 2)', ப.23, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 18, 9வது பதிப்பு, அக்டோபர் 1986.

[28] எம்.ஜி. சுரேஷ், முந்நூல்., ப.19.

[29] இளம்பூரணர்(உரை), தொல்காப்பியம், 'பொருளதிகாரம்(பகுதி 2)', முந்நூல்., ப.48.

[30] மேலது., ப.74.

[31] மேலது., ப.158.

[32] மேலது., ப.161.

[33] மொ.இளம்பரிதி, குறியியல் - ஒரு சங்கப்பார்வை, 'இலக்கியக் குறியீட்டியம்', பக்.48-49, காவ்யா பதிப்பகம், சென்னை - 24, முதல் பதிப்பு, ஆகஸ்ட் 2006.

[34] இளம்பூரணர்(உரை), தொல்காப்பியம், 'பொருளதிகாரம் (பகுதி 3)', முந்நூல்., ப.205.

[35] மேலது., பக்.205-206.

[36] மேலது., ப.207.

[37] மேலது., ப.207.

[38] மேலது., ப.208.

[39] ச. வின்சென்ட், முந்நூல்., பக்.218-219.

இல்ல முகவரி

முனைவர் செ.ர. கார்த்திக் குமரன்

47A, மகால் வடம்போக்கித் தெரு

மதுரை - 625 001.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு